**Press Note**

# FORMER TNEB COMMERCIAL INSPECTOR CONVICTED IN BRIBE CASE

The Complainant Tr.R.Muthukrishnan, S/o Ramasamy, Laxmanam Patty, Krishnarayapuram Taluk, Karur district had submitted an application on 30.10.2008 for getting agricultural service connection under “Self Financing Scheme” and remitted Rs.10,000/- as estimate cost in the O/o the AE (O&M), Mauanur on 31.10.2008. In order to process the application file expeditiously, Tr.Periasamy, Commercial Inspector, demanded Rs.1,000/- on 25.03.2010 as bribe from the complainant.

Since the complainant was not willing to pay bribe, he preferred a written complaint before the officials of Trichy V&AC and then a case in Trichy V&AC on 25.03.2010 was registered against Tr.Periyasamy, Commercial Inspector. During the course of trap proceedings on 26.03.2010, Tr.Periyasamy, Commercial Inspector, received the bribe amount of Rs.1000/- from the complainant and was caught red-handed and remanded to judicial custody.

After completion of investigation, the case was charge sheeted on 18.01.2012. The Hon’ble Special Judge/Chief Judicial Magistrate, Karur conducted trial and convicted the accused in Spl.C.C.03/14 today on 24.07.2023that **“the Accused was sentenced to undergo 2 years Rigorous Imprisonment for Sec.7 of the PC Act,1988 and fined Rs.10,000/-, in default pay fine further 6 months RI and to undergo 3 years Rigorous Imprisonment for Sec.13(2) r/w 13(1)(d) of the PC Act, 1988 and fined Rs.10,000/-, in default to pay fine to undergo further one year RI. Both sentences were ordered to run concurrently”.**

# <u>பத்திரிக்கைசெய்தி</u>

## <u>மின் இணைப்பு வழங்க லஞ்சம் கேட்டு பெற்ற வழக்கில் முன்னாள் மின்வாரிய வணிக ஆய்வாளர் அவர்களுக்கு தண்டனை விதித்து தீர்ப்பு</u>

புகார்தாரர் திரு.R.முத்துக்கிருஷ்ணன், த/பெ.ராமசாமி, லெட்சுமணம்பட்டி, கிருஷ்ணராயபுரம் தாலுகா, கரூர் என்பவர் கடந்த31.10.2008 அன்று தனது பெயரில் உள்ள சுமார் 2.5 ஏக்கர் விவசாய நிலத்திற்க்கு சுயநிதி முன்னுரிமை திட்டத்தின் கீழ் மின் இணைப்பு பெற மாயனூரிலுள்ள தமிழ்நாடு மின்வாரிய உதவிபொறியாளர் அலுவலகத்தில் விண்ணப்பித்ததாகவும் அதற்காக 25.03.2010 அன்றுரூ.10,000/- அதே அலுவலகத்தில் வணிக ஆய்வளராக பணிபுரிந்து வரும் திரு.பெரியசாமி அவர்களிடம் செலுத்திய போது அவர் பணத்தை பெற்றுக் கொண்டு விண்ணப்பத்தின் மீது விரைந்து நடவடிக்கை எடுக்க ரூ.1000/- லஞ்சம் கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விருப்பமில்லாமல் புகார்தாரர் திருச்சி ஊழல் தடுப்புதுறையில் கொடுத்த புகாரின்பேரில் திருச்சி ஊழல் தடுப்புமற்றும் கண்காணிப்புபிரிவில் வழக்கு பதிவு செய்யப்பட்டது.

அதனைத் தொடர்ந்து பொறிவைத்து பிடிக்கும் நிகழ்வில் புகார்தாரர் திரு.R.முத்துக்கிருஷ்ணன் என்பவரிடமிருந்து பணம் ரூ.1000/- லஞ்சமாக திரு.பெரியசாமி வாங்கிய போது கைது செய்யப்பட்டு நீதிமன்றக்காவலில் வைக்கப்பட்டார். இதனைத் தொடர்ந்து இவ்வழக்கு விசாரணை முடித்து, 18.01.2012 ஆம் தேதியன்று குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு, மாண்புமிகு சிறப்பு நீதிபதி மற்றும் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், கரூர் அவர்களின் நீதிமன்றத்தில் விசாரணை நடைபெற்று, இன்று 24.07.2023-ஆம் தேதி கீழ்க்கண்டவாறு தீர்ப்பளிக்கப்பட்டது.

எதிரி திரு.பெரியசாமி, வணிக ஆய்வாளர், உதவி மின்பொறியாளர் அலுவலகம், மாயனூர், கரூர் என்பவர் ஊழல் தடுப்புசட்டம் 1988 பிரிவு-7 and 13(2) r/w 13(1)(d)-ன் படி குற்றவாளி என உறுதி செய்யப்பட்டது. ஊழல் தடுப்புசட்டம் 1988 பிரிவு-7-ன்படி எதிரிக்கு 2 ஆண்டுகள் கடுங்காவல் சிறைதண்டனைமற்றும் அபராதம் ரூ.10,000/- விதிக்கப்பட்டது. மேற்படி அபராத தொகையை செலுத்த தவறினால் 6 மாதம் கூடுதல் கடுங்காவல் சிறைதண்டனை விதித்தும், மேலும் சட்டப்பிரிவு13(2) r/w 13(1)(d)-ன் படிஎதிரிக்கு3 ஆண்டுகள் கடுங்காவல் சிறைதண்டனையும் ,அபராதமாக ரூ.10,000/- விதித்தும், மேற்படி அபராத தொகையை செலுத்த தவறினால் 1வருடம் கூடுதல் கடுங்காவல் சிறைதண்டனை விதித்தும், இத்தண்டனை காலங்களை ஏககாலத்தில் அனுபவிக்குமாறு தீர்ப்புவழங்கப்பட்டது.